| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **71/2021** |
| **DATE** | : | **17.04.2026** |
| **பெயர்** | : | **ஆனந்தன்** |
| **தந்தை பெயர்** | : | **விஜயராகவன்** |

**<u>பிரதிவாதி தரப்பு வா.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

11. வழக்கு தாக்கல் செய்யும் போது ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த இடைக்கால மனுவில் மேற்படி கட்டிடம் எதுவும் கட்ட கூடாது, எனது சுவாதினத்தில் தலையிடக்கூடாது என்று பரிகாரம் கோரினேன் என்றால் சரிதான். எனது சுவாதினத்தில் இருக்கும் போது பிரதிவாதி எவ்வாறு கட்டிடம் கட்ட முடியும் என்றால் ஏற்கனவே நான் இல்லாத போது கட்டிவிட்டார்கள் மறுபடியும் செய்யக்கூடாது என்பதற்காக மனு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்யும் போதே பிரதிவாதிகள் மொத்த கட்டிடத்தையும் கட்டி முடித்துவிட்டார்கள் என்றால் பின்பிருக்கும் இடத்திற்கும் கட்டக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தேன்.

12. நான் சொல்வது போல் எனது பிராதில் குறிப்பாக சொல்லவில்லை என்ன காரணத்திற்காக என்றால் பின் இருக்கும் இடத்திற்கும் கட்டிடம் கட்டிவிடுவார்கள் என்று அச்சத்தினால் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.6 மாதிரி வரைபடம் ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அந்த வரைபடத்தில் EF புளு பகுதி எதை குறிக்கிறது என்றால் நீதிமன்றத்தின் மூலம் அளந்தது அது என்னுடைய பகுதி. 2ம் பிரதிவாதி ராதிகா, பச்சையப்பனிடம் இருந்து அவரது சொத்தை வாங்கியுள்ளார் அதிலும் எனக்கு உரிமை உள்ளது என்பதை தான் மேற்படி வரைபடம் குறிப்பிடுகிறது. சாட்சி தானாகவே முன்வந்து அதிகாரிகள் அளந்து தனக்கு உரிமை உள்ளதாக கூறியதாக குறிப்பிட்டார்.

13. செந்தில்நாதன் யார் என்றால் 2ம் பிரதிவாதி ராதிகா வீட்டின் பின்பக்கம் உள்ளவர். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள 4 அடி சொத்தானது மேற்படி

செந்தில்நாதனின் வீடு வரை செல்கிறது. செந்தில்நாதன் பாகத்திற்கும் 2ம் பிரதிவாதியின் பாகத்திற்கும் இடையே உள்ள பாகம் யாருடையது என்றால் 1ம் பிரதிவாதி கண்ணகியுடையது. வழக்கு தாக்கல் செய்யும் போது ஒரு பகுதி ராதிகா, ஒரு பகுதி கண்ணகி மற்றும் ஒரு பகுதி செந்தில்நாதனின் சுவாதினத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் கண்ணகி, ராதிகாயுடையது குறிப்பிடப்பட்டுள்ளது.

14. எனது சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள காம்பவுண்ட் நான் வாங்கும் போது இருந்தது அதற்கு பிறகு காலி இடம் இருந்தது. மேற்கு பக்கம் சுற்றுச்சுவருடன் வாங்கியதை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இடித்து கட்டவில்லை தற்போது வீட்டு வேலை நடக்கிறது. கட்டிடம் கட்டுவதற்கு உரிய அங்கீகாரம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–6 வரைபடத்தில் BC சுற்றுச்சுவரில் இருந்து எனது பகுதியில் இருந்து வருவதற்கு வழி ஏதாவது வைத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வீட்டை விற்றவர் மேற்படி சுற்றுச்சுவரில் இருந்து பகுதிக்கு செல்வதற்கு ஏதாவது வழி வைத்திருந்தாரா என்றால் இல்லை, சாட்சி தானாகவே முன்வந்து தெரு வழியாக தான் செல்வோம். சுற்றுச்சுவரில் ஏதாவது கதவு வைத்திருந்தோமா என்றால் இல்லை.

15. எனது வழக்குரையில் நான் உரிமை கோரும் இடம் பொது வழி என்று சொல்லியிருந்தால் அது சரியா என்றால் அது என்னுடைய தனி இடம். ராமு என்பவர் எனக்கு சொத்தை விற்பனை செய்தவர். அவர் ஏதாவது பஞ்சாயத்து செய்தாரா என்றால் இல்லை. ராமு மேற்படி பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பு பற்றி ஏதாவது புகார் கொடுத்திருந்தாரா என்றால் அப்போது ஆக்கிரமிப்பு இல்லை. எனது பிராதில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பை அகற்ற மறுத்துவிட்டார்கள் அதனால் தான் ராமுவை பஞ்சாயத்திற்கு அழைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. ராமு எனக்கு விற்பதற்கு முன்பு நான் சொல்வது போல் ஆக்கிரமிப்பு இல்லாத பட்சத்தில் எதற்காக ராமுவை பஞ்சாயத்திற்கு அழைத்தார்கள் என்றால் பஞ்சாயத்தார்கள் அழைத்தார்கள். தெருவார் பஞ்சாயத்து செய்யும் போது

ராமு அங்கு இருந்தார் அது வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 மாதம் முன்பு நடந்தது. மேற்சொன்ன கால விவரத்தை எதற்காக வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் தவறியிருக்கும்.

16. காவல் நிலையத்தில் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் மேற்சொன்ன 1 மாத காலகட்டத்தில் கொடுத்தேன். தேதி , மாதம் தெரியாது அந்த விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 08.10.2018ல் ஆக்கிரமிப்பு கட்டிடம் இருந்ததா என்றால் இல்லை. புகார் அளித்த காலகட்டம் கொரோனா காலம் என்றால் சரிதான். 08.04.2021 அன்று தான் முதல் முறையாக சார்பதிவாளரிடம் ஆட்சேபனை தெரிவித்தோம் என்றால் சரிதான். 2018ல் பிரதிவாதிகள் கிரையம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். 3 வருடம் கழித்து 2021ல் தான் புகார் கொடுத்தேன் என்றால் என்னுடைய ஆக்கிரமிப்பிற்கு வந்த போது வழக்கு தாக்கல் செய்தேன். இடைப்பட்ட காலகட்டத்தில் என்னுடைய சுவாதினத்தில் இருந்தது என்பதை காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மனசாட்சி தான் ஆவணம்.

17. எனது கிரைய ஆவணம் வா.சா.ஆ.2ல் உள்ள ஜக்குபந்திகள் சரி. அந்த ஜக்குபந்தியில் மேற்கே கிருஷ்ணப்ப நாயக்கரின் மனைவீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வீட்டை வாங்குவதற்கு முன்பு முழு அமைப்பையும் பார்த்து தான் வாங்கினேன். நான் தான் மேற்படி கிரைய ஆவணத்தை தயார் செய்தேன். ஜக்குபந்தியில் மேற்கில் காலி இடம் பற்றி குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்றால் எங்களுடைய இடம் தாண்டி உள்ளதற்கு ஜக்குபந்தி எழுதினோம். கிராம நத்தம் பட்டா பொது வழிக்கும் சேர்த்து தான் கொடுக்கப்பட்டது. எதற்காக மறுபடியும் பட்டா கோரினேன் என்றால் விடுபட்ட 1 அடிக்காக பட்டா கோரினேன். வா.சா.ஆ.8 நான் தாசில்தாருக்கு கொடுத்த மனு. அதில் 3 அடி ஆக்கிரமிப்பு என்றும் 1 அடி என்னுடையது என்றும் மனு கொடுத்தேன். அந்த 3 அடி காலி இடத்திற்கு மோசடி பட்டா கொடுத்தால் அது எனது உரிமையை பாதிக்காது என்று

குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. 4 அடி என்பது எது என்று எனக்கே தெரியாது என்பதால் தான் சரியான அளவீடுகளோ, ஆவணங்களோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால்
சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN
Date: 2026.04.17 19:44:59 +0530